SC 79/2018 24.10.2024

மோகன். PW1

சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் விசாரித்தார்கள். நான் புகாரை என் கைப்பட எழுதிக் கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாரில் நான் புகார் கொடுத்த தேதியை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ய பத்து நிமிடங்கள் போதும் என்றால் அது அவர் கொடுக்கும் வாக்குமூலத்தை பொறுத்து அமையும்.13.5.2018 அன்று போலீசார் என்னை அழைத்து வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டும் என்று நிர்பந்தம் செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் போலீஸ் வாக்குமூலத்தில் 14 5 2018 அன்று காவல் நிலையம் செல்லும் போது இரண்டு எதிரிகள் முகம் மறைக்கப்பட்டு அங்கு இருந்தார்கள் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் பதிவு செய்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் எந்த போலீசார் எதிரிகளை தேடுகிறார்கள் என்று குறிப்பு இல்லை என்றால் சரிதான். 2008 ஆண்டு காலகட்டத்தில் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அருகே தாலுகா காவல் நிலையம் இருந்தது என்றால் சரிதான். நான் காஞ்சி தாலுகா காவல் நிலையத்தில் எதிரிகளை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த நபர் நல்ல மனநிலையில் இருந்தார் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் அவர் பதற்றத்துடன் இருந்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் யாருடைய தூண்டுதலும் இன்றி பதிவு செய்யப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி விருப்பத்துடன் தான் கொடுத்தார் என்ற குறிப்பு அதில் இல்லை என்றால் சரிதான். போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எதிரி கொடுத்ததாக ஒரு ஒப்புதல்

வாக்குமூலத்தை நான் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. என் முன் காட்டப்படும் புகார் நான் கைப்பட எழுதவில்லை என்றால் நான் கைப்பட எழுதியது ஆகும். நான் கொடுக்காத ஒரு புகாரை கொடுத்ததாக நீதிமன்றத்தில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. EX P1 காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்பதை பூர்த்தி செய்யவில்லை என்றால் சரிதான். புகாரில் எனது பெயருக்கு முன்பு முதல் எழுத்து இடைச் செருகளாக போடப்பட்டுள்ளது என்றால் பிற்பாடு நான் சேர்த்தேன். இவ்வழக்கு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது என்று நான் குறிப்பிடுவதைப் போல13.5.2008 அன்று எந்த நபரும் என்னிடம் எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலீஸ் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் கையொப்பம் செய்துவிட்டு அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு நாங்கள் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.